Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 08 விலை ரூபா; 5-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Weekly வெள்ளி மஞ்சரி

நாதம் 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 சித்திரை 27 (10 - 05 - 1991) வெள்ளிக்கிழமை ஓசை: 81

## மாணவர் முத்திரைக்கு பாடசாலை உபகரணம்

(யாழ்ப்பாணம்)

மாணவர்கள் தமது மாணவ உணவு முத்திரைக்குபாடசாலை உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டிருப்பதாக யாழ். பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் இ சுந்தரலிங்கம் தெரிவித்தார். தீவகப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மாணவர்கள் தமது பாடசாலை உபகரணங்களை இழந்திருப்பின் அதனைப் பெற்றுக்கொள்வதற்கா (8 ஆம் பக்கம் பார்க்க)

## மாறி மாறி வந்த சிறிலங்கா அரசுகளுக்கு

# தமிழர் பிரச்சினையை தீர்க்க மனோவலிமை இருக்கவில்லை

### பிரித்தானிய பிரபுக்கள் சபையில் றிப்பன் பிரபு

(லண்டன்)

முப்பத்தைந்து வருடகாலமாக தமது தாயகத்தின் கௌரவத்தைப் பேணிக்காக்க போராடிவரும் தமிழரின் கோரிக்கைகளை முழுமையாகவோ அன்றிப் பகுதியாகவோ சிறிலங்கா அரசுகள் அங்கீகரித்துள்ளன. ஆனால், மாறிமாறி வரும் சிறிலங்கா அரசிற்கு கோரிக்கையை அமுல்படுத்தும் மனோவலிமை இருக்கவில்லையென அதிவணக்கத்திற்குரிய ஆயர் றிப்பன் பிரபு பிரித்தானிய பிரபுக்கள் சபையில் உரை நிகழ்த்தும் போது தெரிவித்தார்.

அவர் தமது உரையில் சிறிலங்காவில் நிகழ்பவைபோன்று துன்பகரமான நிகழ்வுகள் உலகில் மிகக் குறைவு. பாரசீக வளைகுடாப் போர் உலகில் நடந்த பல சம்பவங்களைமூடி மறைத்து விட்டது எனவும் தெரிவித்தார்.

மேலும் அவர் தமது உரையில் புலிகள் - அரசு தரப்புயுத்தத்தில் சிறிலங்கா சீரழிந்துள்ளது. தமிழர் - சிங்களவர்பிரச்சினை ஓர் நீண்டகாலச்சம்பவமாகும். தமிழர் கடந்த முப்பத்தைந்து வருடங்களாகத் தமது தாயகத்தின் கௌரவத்தைப் பேணிக் காக்கும் வகையில் பிரதேச சுயாட்சி, தமிழ் மொழிக்குச் சம அந்தஸ்து, பிரஜாவுரிமை ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி வருகின்றனர். கோரிக்கைகளை முழுமையாகவோ, பாதியாகவோ அரசுகளும்அங்கீகரித்துள்ளன. ஆனால், மாறி மாறி வரும் சிங்கள அரசாங்கங்களுக்கு கோரிக்கைகளை அமுல் படுத்துவதற்கான மனோ வலிமை இல்லை என்றார்றிப்பன்பிரபு.

நகரங்களையும், கிராமங்களையும் குண்டு வீசித் தாக்கும் அரசாங்கத்தின் செயலுக்குப் பயந்து முகாம்களில் சுமார் ஒரு லட்சம் பேர் தங்கியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இங்கிலாந்தில் பொது மறைமாவட்டம் நிவாரணப் (8 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### ரவி

(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தினருடன் நேற்று முன் தினம் ஏற்பட்ட மோதலில் கப்டன் ரவி (பாலசிங்கம் ஜெயக்குமார் பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு) என்பவர் வீரமரணமடைந்துள்ளார்.

இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## இராணுவத்தின் சூட்டிற்கு இரு பொதுமக்கள் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சித்தாண்டிப் பகுதியில் வைத்து இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இராணுவ தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டதாக கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்துள்ளன இதே வேளை இப்பகுதியில் பொது மக்கள் பயணம் செய்த பஸ் வண்டி மீது படையினர் நடாத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு பொது மக்கள் கொல்லப்பட்டதுடன், மேலும் நான்கு பொதுமக்கள் படுகாயமடைந்தனர் என்றும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் செய்தி வெளியிட்டது.

## நாவாந்துறை ஊர்தி முதற் பரிசு பெற்றது

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளினால் ஏற்பாடு செய்து நடாத்தப்பட்ட தொழிலாளர் தின ஊர்வலத்தில் பங்கு கொண்ட கருத்து ஊர்திகளுக்கு பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பரிசுகள் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரின் மாவீரர் கலையரங்கில் எதிர் வரும் ஞாயிறன்று இரவு ஏழு மணிக்கு வழங்கப்படவுள்ளது பரிசுக்குரியவர்கள் நேரில் வந்து பரிசில்களைப் பெற்றுக் கொள்ளும்படி விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது. பரிசுக்குரியவர்கள் விபரம்:

முதலாம் பரிசு - நாவாந்துறையை சார்ந்த மீனவர்க (8 ஆம் பக்கம் பார்க்க)

## ரஞ்சனின் செய்திக்காக பரிசு

ஆசியா விஷன் தொலைக்காட்சி செய்திச்சேவை மிகச் சிறந்த செய்தி வழங்கியமைக்கான பரிசை ரூபவாஹினிக்கு வழங்கியுள்ளது முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் (8 ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டு இராணுவத்தினர் அம்பாறையில் பலி

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்திலுள்ள போகம்விகாய என்னுமிடத்தில் வைத்து இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலில் இராணுவ தரப்பில் இருவர் கொல்லப்பட்டிருப்பதாக கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

அதேவேளை ஓமந்தையில் புதிதாக ஏற்பட்ட மோதல் ஒன்றில் ஏழுஇராணுவத்தினர் காயமுற்றதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## தேர்தல் சட்டம் மீறியதாக 169 முறைப்பாடுகள்

(கொழும்பு)

சிறிலங்காவின் தேர்தல் சட்டங்களை மீறியதாக இது வரை 169 முறைப்பாடுகள் வந்துள்ளதாக சிறிலங்கா பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக ஐம்பது பேர் கைது செய்யப்பட்டுதடுப்புக் காவலில் வைக்கப் பட்டுள்ளனர் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## உயர்தர வகுப்பு அனுமதிக்கு தகுதிகாண் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் உயர் தரவகுப்புகள் வரை நடைபெறும் பாடசாலைகள் கல்வி ஆண்டு 1993 இற்காக மாணவர்களை அனுமதிப்பதற்காகத்தமது பாடசாலைகளிலேயே தகுதிகாண் பரீட்சை ஒன்றை நடாத்தவுள்ளன.

அதில் தகுதியானவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படும் சாதாரணதர மாணவர்களே மேற்படி உயர்தரவகுப்பிற்கு அனுமதிக்கப்படவுள்ளனர் இவர்களுக்கான மேற்படி பரீட்சைகள் எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளன. இதில் தகுதிபெறும் மாணவர்களுக்கான உயர்தர வகுப்புகள் 29 ஆம் திகதிமுதல் ஆரபமாகவுள்ளன எனக் கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது.

சாதாரண தரம் மட்டும் உள்ள பாடசாலை மாணவர் (8 ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய பாடசாலைகளுக்கு விண்ணப்பிக்க முடியாது

(யாழ்ப்பாணம்)

யாழ் நகர தேசியப்பாடசாலைகளில் கல்வி ஆண்டு 1993 ற்காக நடைபெறவுள்ள பாடசாலைகள் மட்டத்திலான தகுதிகாண் பரீட்சைக்கு ஏனைய பாடசாலைமாணவர்கள் விண்ணப்பிக்க முடியாது எனப் பிராந்தியக் கல்வி அதிகாரி தெரிவித்துள்ளார்

யாழ். இந்துக்கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி ஆகிய இரண்டு தேசிய பாடசாலைகளும் தமது பாடசாலைமாணவர்களுக்கு மட்டுமே உயர்தர வகுப்பில் அனுமதிப்பதற்கான பரீட்சையை நடாத்தி தகுதியானவர்களை உயர்தர வகுப்பிற்கு அனுமதிக்கும்.

இதில் உயர்தரவகுப்பில்ஏற்டும் இடைவெளி பின்னர் (8 ஆம் பக்கம் பார்க்க)

## அகிலனை நினைவு கூருகிறோம்

(யாழ்ப்பாணம்)

சமூகவிரோதக்கும்பலினால் படுகொலை செய்யப்பட்ட பரியோவான் கல்லூரி மாணவனான தி அகிலன் அவர்களின் மூன்றாமாண்டு நினைவு தினமாகிய இந்நாளில் அவரை நினைவு கூருகின்றோம். இவ்வாறு விடுதலைப்புலிகள்மாணவர் இயக்கத்தினால் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

### மாற்று ஒழுங்குகள் பற்றி

## கோட்டக்கல்வி அதிகாரிகள் அறிக்கைசமர்ப்பிக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி மாவட்டத்தில் உள்ள அரச பாடசாலைகள் இரண்டாம் தவணைக்காக இன்று ஆரம்பமாகின்றன.

வேலணை கல்விக்கோட்டத்தின் அனைத்துப் பாடசாலைகளும், காரைநகர் கொத்தணியின் அனைத்துப் பாடசாலைகளும், பண்டத்தரிப்பு கோட்டத்தில் சில பாடசாலைகளும் இயங்கமுடியாத நிலையில் இருக்கின்றன என்றும் மொத்தம் 23 பாடசாலைகள் இடம் பெயர்ந்தோருக்கான முகாம்களாக செயற்படுவதாகவும் இந்த நிலையில் இன்று இரண் (8 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

திரவ சவர்க்காரம்

வீட்டுச் சலவைக்கு அதி தீவிர சக்தி கொண்ட மில்க் வைற் திரவ சவர்க்காரம் அழுக்கைப் போக்குவதில் அதி சிறந்தது. அரைப் போத்தல். ரூ 45/- மட்டுமே. மில்க்வைற் யாழ்ப்பாணம். (B2481)


### சுத்தானந்த பாரதியார் தினம்

கவியோகி சுத்தானந்த பாரதியார் தினம் 11. 5. 91 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு புத்தகக் கண்காட்சியும் மாலை 3. 00 மணிக்கு சொற்பெருக்கும். அனைவரும் வருக, (மூவர்ணப்படம் அன்பளிப்பு (B/2489

விழுதுகள் தொடர்
8 ஆம் பக்கத்தில்


## வைத்தியர் தேவை

வவுனியா மாவட்டத்தில் உள்ள கிராம சுகாதாரத் தேவையைக் கவனிப்பதற்கு எம்.பி பி எஸ் (M.B.B.S) அல்லது ஆர். எம். ஓ (R, M O) தகைமையுள்ள வைத்தியர் தேவை. இவருக்கு தங்குமிடம், மோட்டார் சைக்கிள், எரிபொருள் வழங்கப்படும் தகுந்த சம்பளம் கொடுக்கப்படும்.

போரூப் நிறுவனம்
வவுனியா.

(B-2490)

## Aircondition & Refregiration

(குளிரூட்டலும் – பாதுகாத்தலும்)

**புதிய பிரிவு ஆரம்பம் : 11-05-1991**

★ துரித பயிற்சி நெறி
★ சிறந்த விரிவுரையாளர்
★ வெளிநாட்டு வேலைக்குகந்த ஆங்கில விளக்கங்கள்.

விபரங்களுக்கு :

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, St. PETER'S LANE,
HOSPITAL ROAD,
JAFFNA.

(B/2488)


## நினைவு கூருகின்றோம்...

### 1991 - 05 - 10

1985 ஆம் ஆண்டு மன்னார் காவல் நிலையத் தாக்குதலின் போது வீரமரணமடைந்த

சபேசன் (சோமசுந்தரம் சிறீகுமாரன் - கொக்குவில் )

1986 ஆம் ஆண்டு பயிற்சி முகாமில் ஏற்பட்ட வெடி விபத்தில் எமைப்பிரிந்த

★ புனிதவதி (மீசாலை)

இதே ஆண்டு வீரமரணமடைந்த

★ கிங்ஸ்லி | சவுரி (இராசதுரை - முருங்கன் )

★ சகாயம் | கோபி (சந்தியோ - முருங்கன்)

1988 ஆம் ஆண்டு திக்கத்தில் இந்தியப் படையினருடனான மோதலின் போது காயமடைந்து பின் தன்னைத்தானே சுட்டு வீரமரணமடைந்த

லெப். வெங்கடேஸ் (சண்முகசுந்தரம் ஜீவாகரன்- இன்பருட்டி, அல்வாய்)

இதே சம்பவத்தில் காயமடைந்து கைக்குண்டை வெடிக்க வைத்து வீரமரணமடைந்த

கப்டன். றவாஸ் ( ஈஸ்வர ஜீவா - புத்தூர் கிழக்கு)

இதே ஆண்டு கச்சாயில் இந்தியப் படையினரின் திடீர்த் தாக்குதலின் போது வீரமரணமடைந்த

நிதி ( வல்லிபுரம் நிதி - அல்லாரை தெற்கு, மீசாலை )

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

★மேற் குறிப்பிடப்பட்ட மா வீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

விடுதலைப் புலி•ள்
மக்கள் முன்னணி

(B-2486)

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்
நெல்லியடி என். சி.சி. விளையாட்டு கழகத்துடன் இணைந்து நடத்தும்



## கருப புலி கப்டன் மில்லர்

ஞாபகார்த்த

# உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

**இடம்: நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானம்**

போட்டி விதிமுறைகள்: 7 பேர் கொண்ட இந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியானது நொக்கவுட் முறையில் நடைபெறும்.

இப்போட்டியில் தமிழீழத்திலுள்ள எப்பாகங்களைச் சேர்ந்த விளையாட்டுக் கழகங்களும் பங்கு கொள்ளலாம்.

பங்குகொள்ளும் கழகங்கள் இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திற்கு அருகாமையிலுள்ள போட்டி ஒழுங்கமைப்புக் குழுக் காரியாலயத்தில் ரூபா இருபத்தைந்து செலுத்தி தமது கழகங்களின் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளலாம்.

குறிப்பு:- போட்டியில் வெற்றிபெறும் முதல் மூன்று கழகங்களுக்கும் முறையே

**கரும்புலி கப்டன் மில்லர் ஞாபகார்த்த கேடயம்,
மேஜர் கமல் ஞாபகார்த்த கேடயம்,
வீரவேங்கை வினசன் ஞாபகார்த்த கேடயமும் வழங்கப்படும்.**

❁ மிகப் பெறுமதி வாய்ந்த இக்கேடயங்கள் வெற்றிக் கேடயமாக வழங்கப்படும். ❁

இச் சுற்றுப் போட்டியின் இறுதி நிகழ்வானது இவ் வேங்கைகள் வீரமரணமடைந்த நாளான 05-07-1991 அன்று நடைபெறும். அன்றைய தினம் பரிசளிப்பு வைபவமும், விடுதலைப் புலிகளின் கலை, கலாசாரப் பிரிவின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

நன்றி.

- விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கமும், நெல்லியடி என். சி. சி. விளையாட்டுக் கழகமும்

(B/2483)

ஈழநாதம்
வெள்ளி மஞ்சரி

சுதந்திரத்தின் இன்பமும், விடுதலையின் ஆறுதலும் உனக்கு வேண்டுமா? விடுதலையின் விலை, துன்பமும் தியாகமும்.


-நேதாஜி
சுபாஸ் சந்திரபோஸ்




## தேசத்தலைவனின் பாச அணைப்பில்

கரும்புலியிருவரைக் கைகளால் அணைத்துக்
'காவியம்' நிறைகிறது - வளையா
இரும்பினுக்குள்ளும் இளகிய நெஞ்சம்
இருப்பது தெரிகிறது!
'காவியநாயகன்' கண்களிற் கசியும்
கருணைக்கு ஈடுண்டோ? - அவர்
தூய்ய விடுதலைத் தீ சுடர் ஏந்திய
பேரருக்கிணை யுண்டோ?
வங்கைக் கடலினில் வரிப்புலி வீரர்கள்
வரும்பகை முடித்தார்கள் எங்கள்
எல்லையை மீறிய... எதிரியின் படகினை
எரித்தபின் வெடித்தார்கள!
கரும்புலியாகிய கடற்புலி வீரர்கள்
காவியமானார்கள் - எதிரியின்
பெரும்பலமாகிய பீரங்கிப் படகினைப்
பிளந்துடல் சாய்ந்தார்கள்.

-புதுவை இரத்தினதுரை






"இந்தக் கடல் பகுதி நம்மட கட்டுப்பாட்டில இருக்க வேணும்." வடமராட்சிக் கடல பகுதியில் இரைந்து திரியும் சிறிலங்கா கடற்படைப் படகுகளைப் பார்த்து அடிக்கடி சினத்துடன் கூறிக்கொள்வான் ஜெயந்தன். சிறிய வயதிலிருந்தே கடலுடன் மிகப் பரிச்சயமானதாலோ என்னவோ எப்போதும் இவனது கனவுகள் கடலுடன் இணைந்ததாகவே இருக்கும். இவன் கடலன்னையை நேசித்தான். தொட்டால் ஒட்டிக் கொள்ளும் என்று சொல்லக் கூடிய அளவுக்கு கறுப்பு அதனால் இவன் கருமபுலி என்றே அழைக்கப்பட்டான் இவனது நண்பர்களால். மணித்தியாலக் கணக்கில் கடலில் குளிக்கும் போது "டேய் கரும்புலி எழும்பு. உன்ர வெள்ளை காணாதெண்டோ இன்னும் வெள்ளையாக்கப் பாக்கிறாய்" என்று கிண்டல் செய்யப்படுபவன்.

அப்போதெல்லாம் நிஜமாகவே என்னைக் கருமபுலி என்று அழைக்கும் காலம் வரும் என எண்ணிக் கொள்வான் ஜெயந்தன். கரும்புலியாக மாறுகையில் அந்தக் களம் கடலாக இருக்க வேண்டும் என தீர்மானித்துக் கொண்டான ஏனெனில் அவனோடு ஒன்றாகச் சாப்பிட்டு படுத்துறங்கி, ஒன்றாகக் களத்தில் நின்று போராடி இவனது இன்பதுன்ப நிகழ்வுகளில் பங்கு கொண்ட பல நண்பர்கள், 'டேய்' என்று ஒருமையில விழிக்கக்கூடியவர்கள் இந்தக் கடலில் தான் கரைந்து போனார்கள். அவர்கள் ஒவ்வொருவர் இழப்பும் அந்நியர் ஆதிக்கத்தின் கொடுமையை இவனுக்கு உணர்த்திக் கொண்டேயருந்தது. அதுவே இவனைக் கரும்புலியாக மாற்றியது. இவன் தென் தமிழீழத்தைச் சேர்ந்தவன். தென் தமிழீழத்திலிருந்து உருவான முதல் கரும்புலி என்ற பெருமையான வரலாற்றுக் குறியையும் பொறிக்க வைத்தவன்.

மிகவும் ஏழ்மையான பின்னணியைக் கொண்ட இவனது குடும்பம் ஏற்கெனவே ஈழ பிரச்சினையின் கொடூரத்தை அனுபவித்திருந்தது. இவனது இரு சகோதரர்கள் அந்நியப்படை



கரும்புலி கப்டன்
**ஜெயந்தன்**

களால் அழிக்கப்பட்டார்கள். அந்த அழிவுகள் இவர்களுக்கு அச்சத்தைக் கொடுக்கவில்லை. நசிந்து போகும் தன்மையைக் கொடுக்கவில்லை. குடும்பப் பொறுப்பு என்ற பெயரால் போராட்டத்திலிருந்து அந்நியப்படும் நிலைமையைக் கொடுக்கவில்லை. இவனது அண்ணனும் இவனும் போராட்டத்தினுள் இணைந்து கொள்ளத் தீர்மானித்தார்கள். இந்திய இராணுவத்தின் கால்கள் இந்த மண்ணை முழுக் குளியெல்லாம் பதிந்து கொண்டிருந்த காலத்தில் அந்தக் காலடி இடைவெளிகளுக்குள் புலிகளைத் தேடிச்சென்றார்கள்.

"தேவையே கண்டுபிடிப்புகளின் தாய்" என்று சொல்வார்கள், புலிகள் நடமாடும் இடங்கள் எவை எனத் தேடித் திரிந்து அந்த இடங்களிலெல்லாம் குட்டிக்குட்டி முகாம்களை இந்திய இராணுவம் அமைத்துத் திரிகையில் புதிய புதிய இடங்களைக் கண்டறிந்து அங்கே பயிற்சி முகாம்களை அமைத்துக் கொண்டனர் புலிகள். ஆற்றங்கரையோரக் களனிப் பற்றைகள் முதல் வெட்டவெளிகளில் உள்ள வயல் வாடிகள், மலைகள் சூழ்ந்த பகுதிகள் என புதிய புதிய முகாம்கள் பல முளைத்தன அப்படியான ஒரு முகாமில்தான் பயிற்சியெடுத்துக் கொண்டான் ஜெயந்தன்.

பயிற்சிக் காலத்தில் மரக்கட்டைத் துப்பாக்கிகளைத் தூக்கித்திரிந்த கைகளிலே நிஜமான துப்பாக்கிகளால் எதிரிக்குப் பதில் சொல்கையில் தனது வரலாற்றுக் கடமை முடிந்து விட்டது என எண்ண முடியவில்லை இவனால்? தனது பார்வையை அகலமாக்க வேண்டும் என நினைத்துக் கொண்டான். அதனால்தான் கடல்புறாவுக்கென மட்டக்களப்பில் இருந்து யாழ். நகர் நோக்கி வந்த குழுவில் தன்னை இணைத்துக்கொண்டான். அதன்பின் கடலே இவனது களமானது. பல தடவை கடலிலே மோதல். அந்த மோதல்கள்தான் ஒரு கரும்புலி என்ற உணர்வை இவனுக்கு அதிகரிக்கச் செய்தன.

முகாமிலே இவனும் சிதம்பரமும் நண்பர்களாயினர். சிதம்பரம் குருதியால் சிவந்த வல்வை மண்ணைச் சேர்ந்தவன். பலதடவை குறிவைத்துத் தாக்கப்பட்ட நகரம் வல்வை. பிரபாகரன் மீது சிறிலங்கா அரசுக்கு எவ்வளவு ஆத்திரம் உண்டென்பதை இன்று வல்வைப் பட்டினம் சாட்சி சொல்லும். அழிந்த வீடுகள் எத்தனை என்று சொல்வதைவிட எஞ்சியவீடுகள் எத்தனை என்று சொல்வது சுலபம். இதுவரை...



கரும்புலி கப்டன்
**சிதம்பரம்**

சுமார் நானூறு மாவீரர்களைக் கண்ட பூமி. குறிப்பாக கடலிலே மரணித்த போராளிகளில் அனேகர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்கள். கடல் பிரயாணம் எவ்வளவு முக்கியம் என்பது முன்பு போராளிகளுக்கு மட்டுமே தெரியும். இன்று பொது மக்களாலும் உணரப்பட்டு விட்டது. எனவே கடலை எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டிய வரலாற்றுத் தேவை உருவாகி விட்டது.

"ராடர்"களுடன் மோப்பம் விட்டுத் திரியும் சிறிலங்கா கடற்படைப் படகுகளை அழிக்குக்கொண்டுவரும் முயற்சியில் ஏற்கெனவே காந்தரூபன், வினோத், கொலின்ஸ் ஆகிய மூவர் கரும்புலியாக மாறினர். இவர்களில இருவர் வல்வை மண்ணில் தோன்றியவர்கள் அங்கிருந்தே இம்முறையும் ஒரு கரும்புலி உருவானது. கரும்புலியாகும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது என்பதைக் கேட்ட ஜெயந்தனும் சிதம்பரமும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினர். உலகில் இக்காட்சியை தமிழீழத்தில் மட்டுமே காணமுடியும். இந்த வரலாற்றுப் பெருமைக்கு உலகில் உள்ள எந்தத் தேசிய இனமும் உரிமைகொள்ள முடியாது. மண்மீட்புப் பணியில் ஈடுபடும் எந்தத் தேசிய இனமும் இவ்வளவு எண்ணிக்கையில் இப்படியான வீரர்களைப் பெறவில்லை. சாவு வரப்போகிறது என்பது எந்த மனிதனின் மனதிலும் சிறுதாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது. ஆனால் கரும்புலிகள் மத்தியில் அது ஆனந்தத்தைக் கொடுக்கிறது. ஏனெனில் அவர்கள் ஒரு சரியான தலைமையின் கீழ் செயற்படுகிறோம், மன நிறைவான ஒரு பணியில் ஈடுபடுகிறோம் என்ற பூரிப்பில் உள்ளவர்கள்.

அந்த இறுதி நாட்களில் மிகக் கலகலப்பாக மாறினர். நண்பர்களோடு கட்டிப்பிடித்து, பத்துப்பதினைந்து வயது குறைந்த மாதிரியான மனஉணர்வில் ஒவ்வொருவருக்கும் அடித்துவிட்டு ஓடி துரத்துப்பட்டு, எல்லோருடைய சாப்பாட்டுக் கோப்பையிலும் கிள்ளி தமது வாயில்போட்டு, எங்களை என்றும் மறந்துவிட முடியாது என்றமாதிரி நடந்து கொண்டனர்.

தமது உடுப்புகளை ஒவ்வொருவருக்கும் கொடுக்கையில் தமது ஞாபகமாய். 'எனது பாக்கில் ஒரு போட்டோ இருக்கு. அதைச் சிக்கன்னையிட்ட குடுங்கோ'' என்றான் ஜெயந்தன். அவர்

(2 ஆம் பக்கம் பார்க்க)

# நடுநிசியில் ஒரு நல்லமனம்

சிறுகதை

உச்சி வெய்யில், கதிரவனின் கனல் கதிர்வீச்சுக்களை பூமியில் வசிக்கும் ஜீவராசிகளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதுவும் பங்குனி வெய்யில் என்றால் சொல்லவா வேணும்?

வீசிய காற்றும் எங்கேயோ போய் உறங்கிக் கிடக்கின்றது. மைதிலியின் தேகம் வியர்த்துக் கொட்ட சைக்கிளை வேகமாக மிதிக்கின்றாள். காற்று ஒரு முறை வீசியடித்து மைதிலியின் தேகத்தை வருடிச் செல்கின்றது... தேகம் அதிசுகமாக இருக்க, ஆஹா; என்ன புத்துணர்ச்சி!

மைதிலி சைக்கிளால் இறங்கி வீட்டிற்குள் நுழைகின்றாள். குசினிக்குள் இருந்த கனகம் மகள் மைதிலியைக் கண்டதும் குசினியை விட்டு வெளியேறி—

"பிள்ளை மைதிலி... சங்கரிடமிருந்து கடிதம் போட்டுக் கிடக்குது" என சந்தோஷப் பூக்கள் முகத்தில் மலர ஆவலாகக் கூறின வார்த்தைகளை மைதிலி காதுகளில் விழுத்தாது வீட்டிற்குள் நுழைந்து, சைக்கிளில் இருந்து மேசை மேலிருந்த ஒரு புத்தகத்தை எடுத்து முகத்திற்கு விசுக்கிக் கொண்டிருந்தாள்.

"என்ன மைதிலி, நான் சொல்லுறதொண்டையும் நீ காதிலை விழுத்தாமலிருக்கிறாய்" என்று சற்று அதிகாரத் தொனிக்க கனகம் கூறுகின்றாள். அந்த அதிகாரங்கள் மைதிலிக்கு அதிகாரங்களாக இருக்க;

"அதை ஏனம்மா எனக்குச் சொல்லுறியள்? சங்கர் உங்களுக்குத்தானே கடிதம் போட்டவர்" என முகத்தைச் சுழித்துக்கொண்டு மைதிலி கூறுகின்றாள்.

"மைதிலி உன்னைப் பற்றியும் சங்கர் கடிதத்திலை எழுதிக்கிடக்குது. அதனாலை தான் பிள்ளை உனக்குச் சொல்லுறன். உன்னை வீட்டிலை அடக்கமாக இருக்கட்டாம்; கூட்டம் அதிதெண்டு ஓடுக்கும் திரியவேணாம்; அதோடை பிள்ளை நீ அடிக்கடி முகாலுக்கு நிலைய, மாதர்சங்கமெண்டு திரியிறதெல்லாம தனக்குத் துப்பரவாப் பிடிக்கேல்லையாம்!" எனக் கனகம் கூறினாள். மைதிலியின் தேகம் ஒருக்கால் 'ஜில்' என்றது. கண்கள் சிவக்க, விழிகளை அகட்டி–

'நான் அங்கை இஞ்சை எண்டு போறதைத் தடுக்க இவர் ஆரம்மா? இஞ்சை வாழுறதுக்குப் பயந்து அன்னிய மண்ணிலை, அதுவும் அடிமை வாழ்வு வாழ்ந்து கொண்டு என்னைத் திருத்திறாரே... ஆரம்மா இவருக்கிந்த அதிகாரத்தைக் குடுத்தது! நான் என்ரை இஷ்டத்துக்கு நடப்பன் விடுவன். இவரார் இதைக் கேக்கிறதுக்கு?'' என மைதிலி தாய் கனகம்மேல் எரிந்து விழுந்தாள்.

"என்ன மைதிலி கதைக்கிறாய் நீ, சங்கர்தானே உன்னைக் கலியாணம் செய்யப் போறவர்."

"ஏ... ஏ... என்ன? சங்கரையோ நான் க... க... கலியாணம் செய்யிறது? இந்த மண்ணிலை இவ்வளவு அநியாயங்களும், அக்கிரமங்களும் நடந்துகொண்டிருக்க, தன் உயிருக்குப் பயந்து எண்டு இந்த மண்ணை விட்டு வெளியேறி அந்நிய மண்ணிலை பஞ்சு மெத்தையில் பகற்கனவு காணும் ஒரு பிசாசுக்கா அம்மா நான் என்ரை கழுத்தை நீட்டிறது? தயவுசெய்து உந்த எண்ணத்தை நீங்களும் உங்கண்டை மனதிலையிருந்து பறந்திடுங்கோ" மைதிலி உணர்ச்சிவசப்பட்டு கூறின வார்த்தைகளைக் கேட்ட கனகம்–

"என்ன பிள்ளை, உனக்கு விசரே சீதனம் ஒண்டும் வாங்காமல்லே உன்னைக் கட்டிறன் எண்டு சங்கர் கடிதம் போட்டுக்கிடக்குது. உன்னை இந்தியாவுக்குக் கூட்டிக் கொண்டு வரட்டாம்! அங்கையே தாலியைக் கட்டிப் போட்டு அப்பிடியே கனடாவுக்குக் கூட்டிக்கொண்டு போறனாம்! இப்பிடி ஒரு மாப்பிளை கிடைக்குமெண்டு கனவு கண்டனீதே மைதிலி?"

"வீணாக ஏனம்மா மனக்கோட்டை கட்டிறியள்? எனக்கிப்போதைக்கு கலியாணம் வேண்டாம்" மைதிலி தன் உறுதியான முடிவை கனகத்திற்குக் கூறியதும் கனகத்திற்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

கரணவாய் - ரவி

ஒரு பெண் தனக்குத் திருமணம் வேண்டாம் என்றால் அவள் வாழ்வில ஒரு அந்தரங்க விசயம் அடங்கியிருப்பதென்றல்லவா அர்த்தம். அந்த அந்தரங்க விசயம் என்ன என்பதை அறிய கனகம் ஆவற்பட்டாள். கனகத்தின் மனதில் ஏதேதோ எண்ணங்கள் எல்லாம் மலர - தயங்கி

"ஆரையும் நீ கா... கா... காதலிக்கிறியே? என கனகம் வார்த்தைகளை இழுத்து ஒருவகை கூச்சத்துடன் மைதிலியைக் கேட்டாள்.

ஓம் மா– நான் இந்த மண்ணைத்தான் காதலிக்கிறன்" வெளிப்படையாகவே மைதிலி தன் மனதை தாய் கனகத்திற்குக் கூறினாள். கனகதின் தேகம் முழுவதும் வியர்த்துக் கொண்டு நிற்கின்றது... "ஏன் சொன்னாள்? எதற்குச் சொன்னாள்" ஒரு வகை ஏக்கம் மனதைக் குடைந்து கொண்டிருக்க, நினைவுகள் சுழருகின்றது... மைதிலியுடன் வார்த்தைகளை நிறுத்தி விட்டு அப்படியே கதிரையிலமர்கின்றாள் மௌனம்...

மைதிலி ஒரு சமூக சேவகி; சமூக சேவையே அவளின் உயிர் நாடி. சமூகத்தின் நலம் பாடுக்காகவே தினமும் உழைப்பவள் ஆரம்ப சுகாதார நிலையம், மாதர்சங்கம் என்பனவற்றின் தலைமைகளை ஏற்று அதன் வழியாக பெண்களை ஐக்கியப்படுத்தி பெண்ணினத்தின் விடியலுக்காக குரல் கொடுப்பவள்.

இவளின் சேவைகளை அறிந்த பெண் போராளிகள் இவளுடன் தங்கள் கருத்துக்களைப் பரிமாறி இவளின் செயற்பாடுகளுக்கு ஊன்றுகோலாய் இருந்தனர்.

இவள் ஒருநாளாவது ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் மாதர் சங்கத்திற்கும் போகாமல் விடமாட்டாள். இவள் பெண்ணினத்திற்கு நல் வழியைக்காட்டும் கலங்கரை விளக்கம்.

இடப்பட்ட, முதிபோக்கு எண்ணங்களைக் கொண்ட இந்த மைதிலி எப்படி இந்த மண்வாசனையை மறந்து அன்னிய தேசத்திற்குப் பறப்பாள்?

சில மேடைகளிலே மாதர் சங்கத்தலைவி என்ற முறையில் பெண்ணடிமைகளை கருப்பொருளாக வைத்தும், இன்றைய போராட்டத்திலே பெண்கள் என்ன பங்களிப்புச் செய்ய வேணும் என்பதை சில பகிர்வுகளிலும் வகையிலே அவள் முன்வைத்த கருத்துக்கள் அனைத்தையும் புதைகுழியில் புதைத்து விட்டுத்தானே அவள் அன்னிய தேசத்திற்குப் பறக்க வேணும்?

பெண்ணடிமை, சீதனங்களைப் பற்றியெல்லாம் கட்டுரை, கதைகளாக வடித்து, மேடைகளிலே பூசாண்டிகள் காட்டிய எத்தனையோ பெண்கள் திருமணம் என்ற வட்டத்திற்குள் வந்ததும் கணவனின் கட்டுப்பாட்டிற்குள் முடங்கியும், சிலர் கணவன்மாருடன் அன்னிய தேசத்திலும் காலங்களைக் கழித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த மைதிலிக்குத் தெரியும் தான் திருமணம் என்ற தனித்த வாழ்விற்குள் நுழைந்தால்... தன் இலட்சியங்கள் இந்த மண்ணிற்குப் பயன்படாது என்று. அதற்காகவே திருமணத்தை வெறுத்து தான் கூறிய அத்தனை கருத்துக்களையும் செயல் வடிவிற்காட்டத் துடிக்கின்றாள்..

பெண் போராளிகளுடன் இணைந்து, ஆயுதம் ஏந்தி ஆண்களுடன் சரிசமமாக களத்தினில் நிற்க தன்னை தயார் செய்த வேளைதான் திருமணம் என்ற புனித வாழ்வை கொண்டு வந்து மைதிலியின் மனதில் வளர்ந்த போராட்ட உணர்வுகளை வேரோடு அறுக்கச் செறிய பெற்றோர்கள் விரும்புகிறார்கள்.

எப்படி அவள் அதற்குச் சம்மதிப்பாள்! இந்தமண் அவளின் கண்களைப்போல் அல்லவா?

கனகம் இன்னும் கதிரையை விட்டு எழும்பவில்லை. வீட்டு முற்றத்தில் நிற்கும் மாமர அடியில் கட்டிவிடப்பட்ட "பப்பி" பாய்ந்து பாய்ந்து குரைக்கின்றது..

கதிரையை விட்டெழுந்த கனகம் வெளியில் சென்று படலையைப் பார்க்க கணவன் கந்தவனம் தோளில் ரவலிங் பாக் Bag குடன் வருகின்றார்.

"பப்பிக்கு கண் தெரியேல்லைப்போலை" என மனதில் நினைத்துக் கொண்டு கனகம் ஓடிப்போய் கந்தவனத்தின் தோளிலிருந்த ரவலிங் பாக்கைக் கழற்றி

"நீங்கள் போனதெண்டுதானப்பா சங்கற்ரை கடிதமும் வந்தது" எனக் கூறிக் கொண்டே மறு கையிலிருந்த சிறு கூடையையும் வாங்குகின்றாள்.

கந்தவனத்திற்கு நல்ல பிரயாணக் களை, விறாந்தையிலிருந்த சாய்மனைக் கட்டிலில் சாய்கிறார் கனகம் பால் கோப்பி ஒன்றை தயாரித்துக் கொண்டு கந்தவனத்தருகில் வந்து–

"ரெலெக்சிலை கதைச்சனீங்களே..." எனக் கூறிக்கொண்டே கோப்பியை நீட்டுகின்றாள். கட்டிலால் எழும்பி கோப்பியை வாங்கிய கந்தவனம்–

"நான் கதையாமலும் வருவனே கனகம் சங்கர் வாற பத்தாந்திகதி இந்தியாவுக்கு வாறானாம். மைதிலியைக் கெதியிலை இந்தியாவுக்குக் கூட்டிக் கொண்டு வரட்டாம். தான தாலியைக் கட்டிப் போட்டு அப்பிடியே கனடாவுக்கு கூட்டிக்கொண்டுபோறானாம்!

அதுதான் கனகம் பத்தாந்திகதி எண்டால் நாளும் காணாது. நாளைக்கு விடியவே பெடிச்சியைக் கூட்டிக் கொண்டு கொழும்புக்குப் போகவேணும்'' முகத்தில மகிழ்ச்சி வளையங்கள் சுழிக்க கூறிக்கொண்டே கந்தவனம் கோப்பியைக் குடிக்கின்றார்.

"அவள் இப்ப ஓமாமே அப்பா.. ஏதோவெல்லாம் கதைக்கிறாள். அவளின்ரை கதையைப் பார்த்தால் இக்கத்துக்குப் போற பிளான் கிடக்குது'' எனக் கனகம் கூறியதும் கந்தவனத்தின் இதயம் வெடிப்பது போலிருந்தது. மூச்சுவிட நெஞ்சம் வலிக்குது. வலது கரத்தால் நெஞ்சை அழுத்திக்கொண்டு

"என... என... என்ன கனகம் சொல்லுறாய் நீ! அவளை நம்பித்தானே நான் பக்கறனோடை வந்தனான்" என வார்த்தைகளை இழுத்துக்கூற மைதிலியும் வீட்டிற்குள் நுழைகின்றாள்.

மைதிலியைக் கண்ட கந்தவனம் மகளை அழைத்து தான் டிக்கற்றுடன் வந்த விசயத்தைக் கூற மைதிலி திருமணம் செய்வதையே மறுத்துவிட்டாள்.

ஏன் எனக் காரணம் கேட்க தான் இந்த மண்ணுக்காக... மண்ணின் விடிவிற்காக... தன்னை அர்ப்பணிக்கப் போகிறன் என்பதை நேரடியாகவே தந்தை கந்தவனத்திடம் கூறினாள்.

கந்தவனத்திற்கு கோபம் தாங்கிக்கொள்ள முடியவில்லை. தன்பேச்சை எதிர்த்து எதிர்நீச்சல் போட்டதை சகித்துக் கொள்ள முடியாமல் தன் இரும்புக் கரங்களால் மைதிலியின் கன்னத்தில் ஓங்கி அறைந்தார்.

அவள் இதை எதிர்பார்க்கவில்லை அடிகளை வாங்கியும் தன் இலட்சியப் படியிலிருந்து ஒருபடிகூட இறங்கவில்லை.

"நீங்கள் அடியுங்கோவப்பா ஆனால், நான் என்ரை முடிவிலை இருந்து மாறமாட்டன். என்ரை உயிர் போனாலும் நான் இந்த மண்ணை விட்டு ஒரு அடிகூட நகரமாட்டன்'' எனக் கூறிக்கொண்டே கேவிக் கேவி அழுதாள்.

கந்தவனத்திற்கு கோபம் தலைக்குமேலை ஏற மைதிலியை இழுத்து வீட்டிற்குள் பூட்டி விட்டு நாளை கொழும்புக்குப் போவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

சூரியன் மட்டுமல்ல மைதிலியின் மனமுமே அஸ்தமித்து விட்டது. நினைவுகள் எல்லாம் சுழலுகின்றது...

அவளால் அந்தச் சிறைக் கதவுகளை உடைத்து சுதந்திர வானத்தில் பறக்க முடியவில்லை. அசோக வனத்துச் சீதை அன்று இராமனின் வரவிற்காக தன் உள்ளத்தை உருக்கி வேதனைகளை கண்ணீராக வடித்தாள். இந்தப் பேதை யார் வரவிற்காக கண்ணீரை வடிப்பது? இவளுக்காகப் பரிந்துபேச இங்கே யார் இருக்கின்றார்கள்...!

நடுநிசி! மைதிலி இன்னும் உறங்கவில்லை. அவளின் கண்களால் பெருகிவரும் கண்ணீர்கள் தலையணையை நனைத்துக் கொண்டிருக்கின்றன. பிஞ்சுக் கரம் வந்து அந்தச் சிறைக்கதவுகளை மெதுவாகத் திறக்கின்றது.

"யாரது?" மனதில் சலனத்துடன் கதவைப் பார்த்தாள் மைதிலி. விளக்கின் வெளிச்சத்தில பிரகாசித்தது தம்பி பிரகாசின் வதனம்.

(6 ஆம் பக்கம் பார்க்க)



கவிதை

## சுதந்திரப் போர்

இளவெடுக்க லெலுங்கொடுமை இழைத்தா லிங்கு
இரத்தநதி பெருக்கெடுக்கும்! சுதந்தி ரத்தில்
மனங்குளிக்கும் இன்பநிலை யற்றுப் போனால்
மண்ணிலெரி மலைகள்தான் வெடிக்கும்! உள்ளம்
கனலெறியின் கதிர்போல எழுச்சி கொள்ளும்;
கரங்களிலே ஆயுதங்கள் ஏறு! வீர
உணர்வுகளே மண்ணெங்கும் ஒலிக்கும்! சுற்றி
ஒடுக்குதலுக் கெதிராயோர் யுத்தம் தோன்றும்!

விறல்கொண்ட இதயங்கள் தம்மைக் கட்டு
வீழ்த்துதலும், துயிலநீங்கி விழிப்பால் தீரத்
திறங்கொண்ட சமுதாயம் மீது நீதி
திணிப்பதுவும், ஆள்வோரின சதியே! இந்த
வடிவுகளோர் நாழிகையில் நொறுங்கும்! அப்போ
வறுமையெறு மக்கள்முன் ஆதிக்கங்கள்
சரிகாணும்! அடிமையின் அகன்று போகும்;
சமுதாய செங்குமொளி வெள்ளம் பாயும்!

துப்பாக்கி யதிகாரங் காட்டி மக்கள்
துணிவுதனை யடக்குதலோர் கொடுமை! அதால்
இப்பாரில் புரட்சிநிலை யொன்றே தோன்றும்;
இயக்கங்கள் உருவாகும்! இதையெதிர்க்கும்
சிப்பாய்க ளின்மண்டை உருண்டே போகும்!
சிற்றினமோர் பெருநெருப்பாய் மாறும்! வீரம்
உயிர்வரும் வேட்கையினா லிந்த மண்ணும்
உயர்வடையும்! சுதந்திரப்போர் வெற்றி காணும்!

-எம். எல் .எம். அன்ஸார்
(காத்தான்குடி)

# நம்பிக்கையுடனும் மன உறுதியுடனும் மண்காக்க காத்திருக்கும் மணலாறு மக்கள்

□ நிரோஜன் □

1984 — மார்கழி

ஓர் இரவு நேரம், தென்னமரவாடி கிராமத்து மக்கள் சிங்கள இராணுவத்தினராலும் காடையர்களினாலும் பயங்கரமான முறையில் அடித்து விரட்டப்பட்டனர். அந்த மக்கள் இரவோடிரவாக கொக்குத்தொடுவாயில் தஞ்சம் அடைந்தனர்.

விடிந்து, சிலமணி நேரங்களின் பின்பு-

முல்லைத்தீவிலிருந்து இராணுவ வாகனங்கள் அணி அணியாக அலம்பில், செம்மலை, குமுளமுனை நாயாறு, கொக்குத்தொடுவாய், கொக்கிளாய் என வந்து நிறைந்தன. வீதிகளிலும், வீட்டு வாசல்களிலும் இராணுவத்தினர் வந்து நின்றனர்.

இப்பிரதேசம் சுற்றி வளைக்கப்படுகிறது. இரவு 9 மணிக்கு முதல் பக்கா அனைவரும் வெளியேற வேண்டும் எனக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

பச்சையுடை தரித்தோருக்கு முன்னிலையிலேயே, தலையில் பெட்டி, படுக்கையுடனும் கையில் குழந்தைகளுடனும் அப்பகுதி மக்கள் அகதிகளாக அநாதரவாக வெளியேறினார்கள்.

அடுத்தடுத்த நாட்களில் கிராமங்களில் வயல்களில் நின்ற சில தமிழர்கள் ஆங்காங்கே சுடப்பட்டு எரிக்கப்பட்டார்கள்.

மணலாறுப் பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலகட்டம் அது. பாரியளவில் - மிகப் பெரும் பணச் செலவீட்டில் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட அக்குடியேற்றப் பிரதேசத்துடன் அழகான - வளமான அந்த கிராமங்களையும் இணைப்பதற்காக சிங்கள அரசு எடுத்த நடவடிக்கையின் மேற்கூறிய தடைவலயச் சட்டமும் மக்கள் வெளியேற்றமுமாகும்.

சிங்கள அரசினரின் இத்தத் திட்டத்தை சிதைப்பதற்காக - முறியடிப்பதற்காக பல போராளிகள் இரத்தம் சிந்தினர். ஆனாலும் அரசோ குடியேற்றத் திட்டத்தை வளர்க்க தீவிரமாகச் செயற்பட்டது. சில இடங்களில் குடியேற்றத் திட்டம் வளர்ந்தது. சில இடங்களில் புலிகளால் தடுக்கப்பட்டது. புலிப்படையும் வளர்ந்தது. இந்தியப்படை இம்மண்ணில் கால் பதித்தது.

இந்தியப்படை இம் மண்ணுக்கு வந்ததையும் அதன் விளைவாக ஏற்பட்ட போர் ஓய்வையும், சிறிலங்கா அரசு திறமையாகப் பயன்படுத்தியது. மணலாறு, வெலிஓயா என்ற பெயர் மாற்றத்துடன் வசதிகள் வாய்ந்த சிங்கள மாவட்டமாக உருப்பெற்றது.

அதே நேரம்,

இந்தியா தமிழர்கள் மீதொரு யுத்தத்தைத் தொடங்கியது. இந்திய அரசினாலும் அவர்களுடன் இணைந்து நின்ற தேசவிரோத சக்திகளாலும் புலிகள் அழிந்துவிட்டார்கள் - அழிக்கப்பட்டுவிட்டார்கள் எனப் பிரசாரம் செய்யப்பட்டது ஆனால், கண்ணுக்குத் தெரியாமல் காடுகளுக்குள்ளே புலிகளின் புதிய படையணிகள் உருவானதும், புலிகள் பலம்மிக்க படையணியாகத் தோற்றங் கண்டதையும் எவரும் அவதானிக்கவில்லை.

ஒரு நிலையில்,

புலிகள் காடுகளை விட்டு வெளிவந்தார்கள். வரிப்புலி சீருடையுடன் வீதிகளிலும், கிராமங்களிலும் அலை அலையாக வந்த புலிகளைக் கண்ட மக்கள் வியந்தனர். வியப்புடன் புதிய நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் அடைந்தனர்.

அது வரை அகதிகளாக தாம் வாழ்ந்த மண்ணை விட்டு விலகி வாழ்ந்த, மணலாறு மக்களின் மனங்களில், புதிய நம்பிக்கை தோற்றம் பெற்றது தமிழர்களின் தேசிய படையான புலிகள் பலம்பெற்றதையும் தமைப் பாதுகாத்துக் கொள்ளும் வளர்ச்சி நிலையை அடைந்ததையும் கண்ட மக்கள், தமது சொந்தக் கிராமங்களில் மீண்டும் குடியேறி நிலைபெறத் தொடங்கினார்கள்

கொக்கிளாயும் கொக்குத் தொடுவாயும், கருநாட்டுக் கேணியும் நாயாறும் மீண்டும் களைகட்டத் தொடங்கின. ஓலைக் குடிசைகள் கிராமங்கள் எங்கும் முளைத்தன. அப்பகுதி மக்கள் வாழ்வாயினும், சாவாயினும் அந்த மண்ணிலேயே ஏற்பட வேண்டும் என முடிவெடுத்துக் கொண்டனர்.

ஆனால், சிங்கள ஒநாய்களின் இலக்கு பெரியது! அவை எப்போதும் தம்மைக் கடித்துக் குதறக் கூடும் என்பதும் அப்பகுதி மக்கள் அறிந்ததே. அவர்கள் தம்மை நிலைப்படுத்திக் கொள்வதற்கு பலப்பட வேண்டியிருந்தது. இளைஞர்கள் புலிகளாயினர் - திருமணம் செய்தவர்கள் துணைப்படைகளாகினர்.

மொத்தத்தில், தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் பலத்தை அப்பகுதியில், தமிழர்கள் பெற்றுக்கொண்டனர்!

28 4 1991 அன்று, மணலாறு கிராமங்களில்-

வழமையான குண்டுகளை வீசும் வானூர்திகள் பிரசுரங்களை வீசின. இராணுவம் நடவடிக்கையை மேற்கொள்ள இருக்கிறது. உடனே கிராமங்களை விட்டு வெளியேறவும் என துண்டுப்பிரசுரங்கள் மிரட்டின.

1984 ஆம் ஆண்டு வீட்டு வாசல்களில் நின்று மிரட்டியவர்கள் இன்று விமானங்களில் நின்று மிரட்டினர் 7 வருடங்கள் சென்றும், சிறிலங்கா அரசினரின் சிந்தனைகளில் மாற்றம் வரவில்லை என்பதையே இந்த நடவடிக்கை தெளிவு படுத்தியது.

ஆனால், அப்பகுதியில் ஏற்பட்ட மாற்றங்களைப் பற்றி சிறிலங்கா அரசோ - படைகளோ அறியவில்லைப் போலும். தோளில் கனக்கும் துப்பாக்கிகளுடன் எதிரியின் வரவை எதிர்பார்த்து நிற்கும் அப்பகுதி மக்கள் தோல்வியடையப் போவதுமில்லை அம் மண்ணை விட்டு விலகப் போவதும் இல்லை.- இது வரலாறு காட்டப் போகும் உண்மை.

> இணைந்த தமிழீழ தேசம் இருக்கக் கூடாதென்பதற்காக உருவாக்கப்பட்டதுதான் வெலிஓயா (மணலாறு) சிங்களக் குடியேற்றத்திட்டம். அண்மையில் இக்குடியேற்றத் திட்டத்தை மேலும் விஸ்தரிப்புச் செய்வதென சிங்கள அரசினர் திட்டமிட்டனர்.
>
> அதன்படி, மணலாற்றின் வடமேற்கில் ஒதியமலை வரையும் வடகிழக்கில் கொக்குத்தொடுவாய் வழியாக கொக்கிளாய் வரையுமாக குடியேற்றத்தை விஸ்தரிக்க எண்ணினர் ஆனால் அந்த அப்பகுதியில் பலம் பெற்றுவிட்ட புலிகளும் புலிகளுக்கு பக்கபலமாக ஆயுதமேந்தி நிற்கும் மக்களும் தடையாக நிற்கிறார்கள். அப்பகுதியில் குடியேற்றப்பட்ட சிங்களவர்களை பாதுகாப்பதற்கு, திட்டமிட்டபடி குடியேற்றத்தை விஸ்தரிப்பதற்கும் புலிகளை பலவீனப்படுத்த வேண்டிய தேவை சிறிலங்கா அரசுக்கு எழுந்துள்ளது. மக்களை அப்பகுதியிலிருந்து வெளியேற்றுவதன் மூலம் புலிகளை பலவீனப்படுத்தி அகற்றுவதுடன் நிலங்களையும் அபகரித்து விடலாம் என சிங்கள அரசு எண்ணுகிறது. ஆனால், அப்பகுதி மக்கள் தமது கிராமங்களை விட்டு அகலத் தயாராக இல்லை.

# B-52: அமெரிக்காவின் "ஆகாயக்கோட்டை"

சதாம் ஹுசைனுக்கு இரண்டு தட்டுதட்டி, அவரின் சக்திமிக்க இராணுவ இயந்திரத்தை அக்கு வேறு ஆணி வேறாகக் கழற்றி எடுப்பதற்காக ஃபுளோரிடாவில் இருக்கும் தனது பணிமனையிலிருந்து புறப்பட்ட, அமெரிக்க ஆயுதப்படைகளின் இந்திய பெருங்கடல் மற்றும் ஆசிய பிராந்திய தலைமைத் தளபதி ஜெனரல் நோர்மன் சுவார்ஸ் கொவ்வின் அணியப் பெட்டியில் (tool box) அருமந்த பழம், ஆலவால பாவனைக்கு ஈடு கொடுக்கும் ஒரே அணியம் B-52 ஆகத்தான் இருக்கும்.

"அமெரிக்கர்கள் வெறும் காகிதப் புலிகள், பூச்சாண்டி எல்லாம் காட்டுவார்கள்" என்ற ஈராக்கியரின் எண்ணத்தில் மண்ணைப் போட்டு, ஈராக்கின் குடியரசுக் காவலர் சேனையை சிதைத்து சிதறடிப்பதில் B-52கள் மும்முரமாக ஈடுபடுத்தப்பட்டன.

சோவியத் யூனியனின் தொலை தூர இலக்குகளை தாக்குவதற்காக அமெரிக்க போர்த் திட்டமிடலாளர் உருவாக்கிய இந்த B-52களுக்கு விமானப்படை இட்ட பெயர் 'ஆகாயக்கோட்டை' (Stratofortress). ஆனால் அமெரிக்கர்களோ இதை 'அசிங்கமான அரக்கன்' என்று கூப்பிடவே விரும்புவர்கள்.

1952இல் போயிங் (Boeing) நிறுவனம் வடிவமைத்துக் கட்டிய எட்டு இயந்திரங்கள் கொண்ட இந்த பிரமாண்டமான கேந்திர குண்டு வீசிகள் (Strategic bombers காலத்துக்குக் காலம் கழுவிப் பூட்டப்பட்டு, நவீனப் படுத்தப்பட்டு வந்தபோதும் இன்று வரை இவைகளின் செயற்பாடு அந்தரங்கமாகவே இருக்கின்றன.

ஜிம்மி கார்ட்டர் காலத்தில் B-52க்களில் சக்திவாய்ந்த நிலையை திறன்மிக்க பாரம் குறைந்த புதிய இயந்திரங்கள் பொருத்தப்பட்டன. இலக்குகளை துல்லியமாக தாக்கக்கூடிய வகையில் புதிய இலத்திரனியல் சாதனங்கள் மற்றும் தன்னியக்க கட்டுப்பாட்டு கம்பியூட்டர்கள் என்பன இணைக்கப்பட்டு விமானத்தின் ஆற்றல் அதிகரிக்கப்பட்டது.


**சபாபதி ராஜேந்திரன்**

ரோனால்ட் றேகனின் நிர்வாகத்தில், கம்யூனிசத்தை பிச்சை எடுக்க வைத்த, 2 பில்லியன் (2,000 மில்லியன்) டொலர் கேந்திர ஆயுத உற்பத்தி திட்டத்தின்கீழ் இந்த விமானங்களில் இயக்கத்தை சற்றலைட்டுகள் மூலம் நெறிப்படுத்தி, தசமகான வரைபடங்களைக் (Digital maps) கொண்டு, 10,000 மீற்றர் உயரத்திலிருந்து 300×75 சதுர மீற்றர் பரப்பில் குண்டுகளைப் பொழியக் கூடிய அளவுக்கு B-52களின் துல்லியம் உயர்த்தப்பட்டது.

இந்த ஆகாயக் கோட்டையின் உடல் பகுதி (Fuesalage) 49.05 மீற்றர் நீளமானது. சிறகுகள் (Wingspan) 56.39 மீற்றர் விசாலமானது. எய்தக் கூடிய உயர்வேகம் மணிக்கு 957 கிலோ மீற்றர். எழக் கூடிய உயரம் 16 765 மீற்றர் மீள எரிபொருள் நிரப்பாமல் பறக்கும் தூரம் 16,093 கிலோ மீற்றர்.

B-52க்களின் அழிக்கும் ஆற்றல் பயங்கரமானது ஒவ்வொரு விமானமும் என்பதைத் தி ருவதற்கு மூன்று B-52கள் போதுமானவை.

ஈராக் மீது ஐம்பது B 52கள் இரவு பகலாக 'உருக்கு முட்டைகளை' இட்டன. அவற்றின் இலைகளில் இரண்டு டசினுக்கும் அதிக



ஈராக்கின் பலம்மிக்க குடியரசுக் காவற்படையை சிதறடித்த அமெரிக்காவின் B - 52 குண்டுவீச்சு விமானத்தின் தோற்றம்.

நான்கு 221 கிலோ கிராம் குண்டுகளை தனது ஆயுதக் குடையிலும் (Weapons Bay) இருபத்தி நாலு 340 கிலோ கிராம் குண்டுகளை தனது சிறகுகளின் கீழும் ஒரே தடவையில் காவிச் சென்று வீசக் கூடியவை. எனவே, 1.6 சதுர கிலோமீற்றர் பரப்புள்ள ஒரு நிலத்தை குப்பை மேடாக மாற்றுமானவை அந்து மாகடலில். இந்து சமுத்திரத்தின் மத்தியில் இருக்கும், டியகோ கார்சியாவில் இருந்து செயற்பட்டன.

1990 இன் முடிவில் அமெரிக்க விமானப்படையில் 187க்கும் அதிகமான B-52Gகளும் கிட்டத்தட்ட 96வரையான B-52Hகளும் இருப்பதாக சொல்லப்படுகிறது. 1952-1962 காலப்பகுதியில் 743 B-52க்களை 'போயிங்' உற்பத்தி செய்தது அதன் பிறகு இதன் உற்பத்தி நிறுத்தப்பட்டது

B-52க்களுக்குப் பதிலாக, 21000 மீற்றர் உயரத்தில், ஒலியின் வேகத்தை விட மூன்று மடங்கு அதிக வேகத்தில், மணிக்கு 1,2 00 கிலோ மீற்றர் வேகத்தில், இருமடங்கு யுத்தபாரத்துடன் (Combat Load) செல்லக் கூடிய B 70 Valkyrie குண்டு வீசிகளை உருவாக்க அமெரிக்கா திட்டமிட்டது. ஆனால் உயரப் பறக்கும் விமானங்களை சுட்டு வீழ்த்தக் கூடிய ஏவுகணைகளை சோவியத் யூனியன் உற்பத்தி செய்ததுடன் தாழப்பறக்கும் விமானங்களே சிறந்தவை என்று கருதப்பட்டு, அந்த B 70 திட்டம் பிற்பாடு கைவிடப்பட்டது.

B-52களின் சுற்றுப்பாதுகாப்புக்காக 20 வளியில் இருந்து ஏவப்படும் குறுகிய வீச்சு ஏவுகணைகள் மற்றும் நீண்ட வீச்சுக்கொண்ட 0 50 கலிபர் இயந்திர துப்பாக்கிகள் நான்கும் இவற்றில் பொருத்தப்பட்டுள்ளன ஆனால் வழமையாக F-4W ld Weasals பொருத்தங்களாக (Fighters இவற்றுக்குப் பாதுகாப்பு வழங்குபவையாகும்.

F-4க்களில் சக்திவாய்ந்த ஹாம் High-Speed anti-radiation Missile) ஏவுகணைகள் பொருத்தப்படுவது. எனவே இவை சாம் (Surface -to -air Missile) ஏவுகணை கொள்கலன்களை (Batteries) தேடிச்சென்று தாக்கி அழித்து விடும்.

அத்தோடு, B-52களின் மேற்பரப்பு ஈயப் பூச்சு மற்றும் கெபின (Carbon

(6ஆம் பக்கம் பார்க்க)

# பங்களாதேஷ் புயல் அழிவில் உருவாகும் அரசியல் உறவுகள்

பங்களாதேஷை பெரும் நாசத்தை ஏற்படுத்திய சூறாவளி தாக்கி பன்னிரெண்டு தினங்கள் ஆகிவிட்டன. ஆனால் சூறாவளியினால் ஏற்பட்ட சேத விபரங்கள் பற்றிய சரியான தகவல்களோ அன்றி பங்களாதேஷில் முழுமையான மீட்புப் பணி நடவடிக்கைகளோ இன்னும் இடம்பெறவில்லை. அதே வேளை பல பகுதிகளுக்கு நிவாரணப் பணிகள் சென்றடையவில்லை என எதிர்க் கட்சிகள் குற்றச்சாட்டுகளை எழுப்பியுள்ளன.

மீட்புப் பணிகள் தொடராக மேற்கொள்வதற்கு பங்களாதேஷில் வசதிகள் இல்லை. பெருமளவு ஹெலிகொப்டர்களும், வாகனங்களும் மீட்புப் பணிக்குத் தேவையாகவுள்ளன. அத்தோடு சர்வதேச உதவியும் மீட்புப் பணிக்கு அத்தியாவசியமாக இருக்கின்றது. அதே வேளை, தொடர்ச்சியாக நிலவும் மோசமான வானிலை மீட்புப் பணிக்கு பெரும் தடையாக இருக்கின்றது.

பெரும் சூறாவளி தாக்கிய தன் பின்னர் கடந்த பத்து நாட்களுக்கு மேலும் இரண்டு புயல்கள் அடுத்தடுத்து பங்களாதேஷைத் தாக்கியுள்ளன. அந்நாட்டில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் கன மழையும், மட்டும் மந்தாரமுமான வானமும் நிவாரணப்பணி நடவடிக்கைகளைப் பெரிதும் பாதித்துள்ளன. இதனால் இலட்சக்கணக்கான மக்கள் வயிற்றோட்டம் போன்ற தொற்றுநோய்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும், நூற்றுக் கணக்கில் இறந்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பங்களாதேஷும் சூறாவளியும்

சுமார் 55 ஆயிரம் சதுர மைல் பரப்பளவைக் கொண்டுள்ள பங்களாதேஷ் 11 கோடி மக்களைக் கொண்ட நாடாகும். உலகில் உள்ள வறுமையான நாடுகளில் ஒன்றான பங்களாதேஷின் தனி நபர் வருட வருமானம் 200 டொலருக்கும் குறைவாகும். அதேவேளை வருடா வருடம் பெரும் இயற்கை அழிவிற்கு உள்ளாகும் நாடுகளில் பங்களாதேஷும் ஒன்றாகும்.

பங்களாதேஷிற்கு ஊடாகப் பாயும் கங்கை, பிரமபுத்திரா நதிகளினால் காலத்திற்குக் காலம் ஏற்படும் வெள்ளப் பெருக்கும், வங்காள விரிகுடாச் சூறாவளிகளும் வருடா வருடம் பங்களாதேஷின் பெரும் பொருளாதார அழிவிற்கும் உயிர் அழிவுகளுக்கும் வித்திடுகின்றன. அதேவேளை பங்களாதேஷின் அரசியலுடனும் இந்த இயற்கை அழிவின் துயர்கள் பின்னிப் பிணைந்துள்ளன.

கடந்த மாதத்தின் இறுதியில் (ஏப்பிரல் 30) பங்களாதேஷைத் தாக்கிய சூறாவளி இந் நூற்றாண்டில் பங்களாதேஷைத் தாக்கிய சூறாவளிகளில் பலம் பொருந்திய சூறாவளி எனவும் பெரும் உயிர் அழிவை ஏற்படுத்திய சூறாவளி எனவும் மதிப்பிடப்படுகின்றது. இச் சூறாவளியின் வேகம் மணிக்கு 145 மைல் வேகமாக இருந்தது.

1902 இலும், 1970 இலும் பங்களாதேஷில் பெரும் அழிவுகளை ஏற்படுத்திய சூறாவளிகள் நிகழ்ந்தன. 1902 ஆம் ஆண்டு சூறாவளியினால் ஐந்து இலட்சம் மக்களும் 1970 சூறாவளியினால் 1,10,000 மக்களும் மடிந்தார்கள். ஆனால் அப்போது பெரியளவில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

ஆனால் இச் சூறாவளியின் போது இருதினங்களுக்கு முன்னரே சூறாவளி பற்றிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன. இதனால் ஆரம்பத்தில் சூறாவளி அழிவுகள் பற்றிய தகவல்கள் வரும் போது உயிரிழப்புக்கள் மிகவும் குறைவாகவே ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதே வேளை தற்போதைய செய்திகளின்படி இரண்டு லச்சத்திற்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இந்த இறப்பு ஐந்து இலட்சம் வரையும் செல்லலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சிட்டகாங் நகரில் மட்டும்60,0000க்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அதை அண்டியுள்ள தென்கரையோர நகரான குரிகிஸ் பயாரில் சுமார் 30 000 பேரும் பலியானதாகத் தெரியவருகின்றது,

சூறாவளியின்பின்னர் சிட்டகாங் நகரை இராணுவ ஹெலிகொப்டரில் இருந்து பார்வையிட்ட ஒரு செய்தியாளர் ஆங்காங்கே பல்லாயிரக்கணக்கான சடலங்கள் வெள்ளத்தில் மிதப்பதைக் கண்டதாகவும் அதில் பெரும் பாலானவை சிறுவர்களதும், முதியோர்களதும் சடலங்கள் எனவும் தெரிவித்தார்.


ஒரு அயன வலயத்தில் ஏற்படும் சூறாவளியினாலும், காற்றினாலும், மழை வெள்ளத்தினாலும் கடல் அலையினாலும் பேரழிவுகள் ஏற்படுகின்றன. அதில் குடாக் கடல் பகுதியில் ஏற்படும் சூறாவளிகளின் போது பெரும் அலை எழுச்சிகள் ஏற்படுகின்றன. இவ்வாறு ஏற்படும் அலை எழுச்சிகள் உலகின் ஏனைய பாகங்களைவிட வங்காள விரிகுடாவில் பெரியளவில் ஏற்படுகின்றது. அதிலும் குறிப்பாக பங்களாதேஷை அண்டி ஏற்படுகின்றன. ஏனெனில் குடா ஒடுங்கியதாக முடிவுறுவதே இதற்குக் காரணமாகும்.

1970ஆம் ஆண்டுச் சூறாவளியின் போதும், கடந்த மாத இறுதியில் வீசிய சூறாவளியின் போதும் சுமார் இருபது அடிக்கு மேல் (ஆறு மீற்மேல்) கடல் அலைகளின் எழுச்சி ஏற்பட்டதாகச் செய்திகள் குறிப்பிடுகின்றன. இதனால் பங்களாதேஷின் தென் கரை ஓரத்தில் இருந்த பல தீவுகள் அலைகளினால், கழுவிச் செல்லப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

பங்களாதேஷ் தென்கரை ஓரம் கங்கை, பிரமபுத்திரா நதிகளினால் ஒதுக்கப்படும் வண்டல் மண்களினால் ஆன சிறு மேடுகள் போன்று, பல தீவுகளைக் கொண்டதாகும். செழிப்பான வண்டல் மண் வளத்தைக் கொண்ட தீவுகளில் மக்கள் மீன் பிடித் தொழில் வசதிக்காக குடியேறுவதுண்டு. ஆனால் பங்களாதேஷைத் தாக்கும் சூறாவளிகள் சில வருடங்களுக்கு ஒரு தடவை இத்தீவுகளை கழுவிச் செல்வதுண்டு. இதனால் பெரியளவில் உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன. சில தீவுகள் சூறாவளியின் பின்பு முற்றவோ நீரில் மூழ்கிவிடுவதும் உண்டு. 1985 நவம்பரில் பங்களாதேஷைத்தாக்கிய சூறாவளியின் போது ஐந்து தீவுகள் இவ்வாறு கழுவிச் செல்லப்பட்டன.

## வங்காளவிரிகுடாசூறாவளிநிகழ்வுகள்

மாதாந்த ரீதியில் பத்து வருடச் சராசரி




சாய்வான இலக்கங்கள்:பலமான சூறாவளிகள்
நேரான இலக்கங்கள்: மொத்தநிகழ்வுகள்.

இம்முறை சூறாவளியினாலும் பல தீவுகள் கழுவிச் செல்லப்பட்டன. அத்தோடு பிரதான நிலப்பரப்பில் பல தாழ்ந்த பகுதிகளுக்குள் பிரவேசித்த கடல் நீர் இன்றும் வடியவில்லை. பங்களாதேஷ் பொதுவாகவே கடல் மட்டத்தில் இருந்து உயரம் குறைந்த பகுதியாகையால் அடுத்த நூற்றாண்டில் பங்களாதேஷ் கடலினுள் மூழ்கிவிடக் கூடிய அபாயம் உண்டு என்றும் அமெரிக்க புவியியல் நிறுவனம் ரெட்கிரசென்ட் எச்சரிக்கை செய்துள்ளது.

இப் புயலின் காரணமாக பங்களாதேஷின் இரண்டாவது பெரிய நகரான சிட்டகாங் பெருமளவில் சேதமுற்றது. சிட்டக்காங் நாட்டின் ஏனைய பகுதிகளுடன் இருந்து துண்டிக்கப்பட்டது. சிட்டகாங்கிற்கும் ஏனைய பகுதிக்கும் தொடர்பை ஏற்படுத்தும் பிரதான பாலத்தையும் சூறாவளி அடித்துச் சென்றது.

சிட்டகாங் துறைமுகத்தில் தரித்து நின்ற பல கப்பல்கள் மூழ்கின. இதில் சில சிட்டகாங் பாலம் உடைந்து கப்பல்கள் மீது வீழ்ந்ததனால் ஏற்பட்டவையாகும்.

சிட்டங்காங் விமானத்தளமும் முற்றாகச் சேதமடைந்தது. பங்களாதேஷின் விமானப்படைக்குச் சொந்தமான போர்விமானங்கள் நீரில் மூழ்கிக் கிடந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாக பங்களாதேஷிற்கு செல்ல வேண்டிய நிவாரணப் பொருள்கள் சென்றடைவதிலும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

## சூறாவளியும் அரசியலும்

1970 ஆம் ஆண்டும் பங்களாதேஷைத் தாக்கிய சூறாவளியினால் பெரும் அனர்த்தங்கள் ஏற்பட்டபோது அன்று பாகிஸ்தான் போதிய நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை எனப் பெரும் கண்டனங்கள் எழுந்தன. அன்று பாகிஸ்தானில் இருந்து பிரிந்து சுதந்திரத்திற்காகப் போராடிக் கொண்டிருந்த பங்களாதேஷ் மக்களுக்கு இப்புறக்கணிப்பு சுதந்திரப் போராட்டத்திற்கான உத்வேகத்தைக் கொடுத்தது. போராட்டமும் வெற்றி பெற்றது. பங்களாதேஷும் உருவாகியது. பாகிஸ்தான் பங்களாதேஷ் உறவில் பெரும் விரிசல் ஏற்பட்டது.

ஆனால் கடந்த மாதம் ஏற்பட்ட சூறாவளி பாகிஸ்தான் பங்களாதேஷ் உறவில் புதிய அத்தியாயம் ஒன்றைத் திறந்துள்ளது என்றால் மிகையாகாது.

பங்களாதேஷ் சர்வதேச நிவாரண உதவிகோரிய போது உலக நாடுகள் பல உதவிய போதும் பாகிஸ்தான் பிரதமர் ஒருபடி மேலே போய் நிவாரண உதவிகளுடன்

**இவ்வார நோக்கு**

நேரடியாக தானே டாக்கா சென்றார். சொந்த நாட்டில் ஏற்பட்ட அழிவைப் பார்வை இடுவதுபோன்றுபங்களாதேஷ் பிரதமருடன் விமானத்தில் பறந்துசென்றுசேதவிபரங்களைப் பார்வையிட்டார். பங்களாதேஷைப், பாகிஸ்தான் எப்பொழுதும் கைவிடாது உதவுவதற்குத் தயாராகவுள்ளது எனவும் தெரிவித்தார். இதன் மூலம் தென்னாசியாவில்உள்ள இரு முஸ்லிம் நாடுகளுக்கும் இடையில் முன்னர் இருந்த விரிசலை சீர் செய்யவும் நெருங்கிய உறவை ஏற்படுத்தவும், பாகிஸ்தான் பிரதமர் தீவிர கவனம் செலுத்தினார்.

இதேவேளை பங்களாதேஷின் புயல் நிவாரணத்திற்கு இந்தியா ஒன்றரைக் கோடி ரூபா உதவியும், மூன்று ஹெலிகொப்ரர்களும் கொடுத்து உதவியபோதும் இந்தியா இதைவிட மேலாக உதவி இருக்கலாம் என அரசியல் அவதானிகள் கருதுகின்றார்கள். இந்தியாவைப் பொறுத்து பங்களாதேஷின் இன்றைய பிரதமர் பேகம் கலிதா ஸியா விருப்புக்குரிய பிரதமரல்ல. இதன் காரணமாக பங்களாதேஷில் பேகம் கலிதா ஸியா தேர்தலின் மூலம் பதவிக்கு வந்தாலும் இந்தியாவுடனான உறவில் பெரும் நெருக்கம் ஏற்படவில்லை. இந் நிலையிலேயே சூறாவளி விடயத்தில் இந்தியா பெரிய அக்கறை காட்டவில்லை. அதே வேளை தேர்தலில் தோல்வியடைந்த அவாமி லீக் கட்சித் தலைவி ஹசீனா பிரதமராக இருந்திருப்பின் நிலைமையில் மாற்றம் இருந்திருக்கலாம்.

அதாவது 1970ஆம் ஆண்டு சூறாவளியினால் ஏற்பட்ட விரிசலை 1991ஆம் ஆண்டு சூறாவளியினால் சீர் செய்யலாம் என பாகிஸ்தான் பிரதமர் முனைகின்றார். ஆனால் 1970ஆம் ஆண்டுச் சூறாவளியால் நன்மைஅடைந்த இந்தியா 1991 ஆம் ஆண்டுச்சூறாவளியால் நட்டம் அடையுமா?

-ஜெயா

---

## நடுநிசியில் ஒரு

(6 ஆம் பக்கத்தொடர்ச்சி)

அவளின் கண்மடையால் உடைத்துப்பாயும் கண்ணீரகளை பிரகாஸ் தனது சுட்டி விரல்களால் துடைத்து,

''சரியக்கா,விடிந்ததும் நான்தான் உன்னை சைக்கிளிலை ஏத்திக் கொண்டு போய் காம்பிலை விட்டிட்டு வருவன். நீ முதலிலை படக்கா, நானும் பக்கத்திலை படுக்கிறன்.'' என்று கூறி அருகிலிருந்த கட்டிலில் சரிகின்றான். மைதிலியும் அவனை அணைத்துக் கொண்டு சரிகின்றாள்.

விடியலுக்காக குயில்கள் கீதம் இசைக்கின்றன. கனகம் படுக்கையை விட்டெழுந்து வீட்டின் பின்புற ஜன்னல்கதவுகளைத் திறந்து வானத்தைப் பார்க்கின்றாள். கீழ்வானம் சிவக்கின்றது.

கொழும்புக்குப் புறப்படுவதற்காக கனகம் வெளியில் வந்து முன் ஹோல் சுவரிலே தொங்க விடப்பட்டிருந்த மணிக்கூட்டைப் பார்க்கின்றாள். நேரம் ஆறு மணி.

மைதிலி படுத்திருக்கும் அறையைப் பார்த்ததும் கனகத்திற்கு அதிர்ச்சி! கதவு திறபட்ட நிலையிலிருக்க ஓடிப்போய் அறையைப் பார்க்கின்றாள் மைதிலியைக் காணவில்லை, ஏக்கம் மனதைக் கூடைய மறு அறையில் படுத்திருக்கும் சுந்தவனத்தை எழுப்பி விசயத்தைக் கூறுகின்றாள். சுந்தவனமும் படுக்கையை விட்டு எழும்பி கனகத்துடன் ஒவ்வொரு அறையாகத்தேடுகின்றனர். ஏமாற்றம்.!

கனகம் பின்ஹோலை எட்டிப் பார்க்கின்றாள். பிரகாஸ் உறக்கத்தில் . . .

''ஏதாவது கடிதம் எழுதி வைத்திருப்பாளா? என நினைத்த கனகம்விறாந்தையில் இருந்த மேசையைப் பார்க்கின்றாள் மேசை மேல் அவளின் தோடுகளும் கைவளையல்களும் குவிந்து கிடக்கின்றன. கனகத்திற்கு கவலையை தாங்க முடியவில்லை.

அப்படியே வளையல்களை எடுத்து கண்களிலே வைத்து.

'இஞ்சேருங்கோ . . அவள் போட்டாள் . . . எங்கண்டை கனவுகள் எல்லாத்தையும் கலைச்சு அவள் நிம்மதியாப் போட்டாள்.' என கதறி அழுகின்றாள் கனகம்.

சுந்தவனம் கனகத்தருகில் வந்து வளையல்களைப் பார்த்ததும் வேதனைகளை வெளியில் காட்டாமல் மேசையில் இருந்த டிக்கற்றை எடுத்து திருப்பித்திருப்பிப் பார்க்கின்றார். அப்போது கண்களைக் கசக்கிக் கொண்டு ஒன்றும் தெரியாதவன்போல்பிரகாஸ் எழுந்து வருகிறான்.

(யாவும் கற்பனை)

## உப உணவு செய்கைக்கு குறுகிய காலக் கடன்

உப உணவுப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுவரும் விவசாயிகளுக்கு இலங்கை வங்கி குறுகிய காலக்கடன் வசதிகளை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கனவே விவசாயக்கடன்களைப் பெற்று முழுமையாக கடனைத் திருப்பிக் கட்டிய விவசாயிகளுக்கே இக்கடன்கள் வழங்கப்படவிருக்கின்றன. பயிர்ச்செய்கை பண்ணப்படும் பரப்பளவைப்பொறுத்து கடன் தொகை அமையும் என்றும் இத்திட்டத்தில் புதிய விவசாயிகள் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள் என்றும் இலங்கை வங்கி முகாமையாளர் தெரிவித்தார், (க)

# ஜனாதிபதியை பதவி விலக கோரி தென் கொரியாவில் ஆர்ப்பாட்டம்

(சியோல்)

தென்கொரியத் தலைநகர் சியோலில் சுமார் ஒரு இலட்சத்திற்கும் அதிகமானோர் கூடி ஜனாதிபதியை பதவி விலகுமாறு கோரி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

மாணவர் ஒருவரைப் பொலிசார் குழாயொன்றினால் அடித்துக் கொலை செய்த சம்பவம் தொடர்பாகவே ஜனாதிபதி பதவி விலக வேண்டும் எனப் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்

நேற்று இடம்பெற்ற மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் மாணவர்கள், புத்தபிக்குகள் தொழிலாளர்கள், எதிர்க் கட்சிகள் மற்றும் பொதுமக்கள் பல்லாயிரக் கணக்கில் பங்கேற்றனர். நாடு முழுவதிலுமுள்ள சுமார் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் தமது பாடசாலைகளைப் பகிஷ்கரித்தனர். அதேவேளை மாணவன் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக பிரதமர் மாணவனின் பெற்றோரிடமும் மக்களிடமும் பகிரங்க மன்னிப்புக் கோரியிருந்தது தெரிந்ததே.



பங்களாதேஷில்

## 80 இலட்சம் மக்களுக்கு வயிற்றோட்டம்

(டாக்கா)

பங்களாதேஷில் சுமார் ஒருவாரத்திற்கு முன்னர் வீசிய கடும் சூறாவளியையடுத்து தற்போது வயிற்றோட்ட நோய் பெருமளவில் பரவி வருகிறது. சுமார் 80 லட்சத்திற்கும் அதிகமானோர் இந் நோயினால் பாதிக்ப்பட்டிருக்கலாமென அஞ்சப்படுகிறது சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க எடுக்கப்படும் முயற்சிகள் வெள்ளப் பெருக்கினால் தடங்கலுக்கு உள்ளாவதாகத் தெரிய வருகிறது.

பங்களாதேஷிற்கு ஜப்பான் 20கோடி டாலரையும், சவூதி அரேபியா 10 6 கோடி டாலரையும் வழங்க முன்வந்துள்ளன. இவற்றுடன் சேர்த்து சுமார் 36 கோடி டாலர்கள் பல்வேறு நாடுகளில் இருந்தும் பங்களாதேஷிற்கு கிடைத்துள்ளது.

## மத்திய கிழக்கு மாநாட்டை ஜப்பானில் கூட்ட முயற்சி

(வாஷிங்டன்)

மத்திய கிழககுச் சமாதான மாநாட்டை ஜப்பானில் கூட்டுவது பற்றி அமெரிக்கா ஆராய்ந்து வருகிறது. அமெரிக்க உதவி ஜனாதிபதி வாஷிங்டனிலுள்ள ஜப்பானியத் தூதுவரை இது சம்பந்தமாகச் சந்தித்துப் பேசியுள்ளார். ஈராக்கிற்கு எதிரான வளைகுடா யுத்தத்தின்போது கூட்டுப் படைகளுக்கு ஜப்பான் பெருமளவில் உதவவில்லையென முன்னர் கண்டனம் செய்யப்பட்டது. அமெரிக்காவின் வேண்டுகோளை ஜப்பான் ஆராயுமெனத் தெரியவருகிறது.

அ. தி. மு. க. உத்தியோக பூர்வ

## வேட்பாளரை எதிர்த்து 159அ.தி.மு.கவினர் போட்டி

(சென்னை)

தமிழ் நாடு சட்டசபைக்கான அரவக் குறிச்சி தொகுதியில் போட்டியிடும் அ தி மு. க. கவின் உத்தியோக பூர்வ வேட்பாளரை எதிர்த்து அதே கட்சியைதி சேர்ந்த 159 பேர் போட்டியிடுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன

அரவக் குறிச்சித் தொகுதியில் 267 வேட்பாளர்போட்டியிடுவது தெரிந்ததே

### சங்கிலித் திருட்டு

ஆலயம் ஒன்றில் நடைபெற்ற தேர்த்திருவிழாவுக்கு சகோதரனுடன் சென்ற பாலகன் ஒருவனின் தங்கச் சங்கிலி ஒன்றை சனக் கூட்டத்திற்குள் வைத்து திருடர்கள் அறுத்து சென்றுள்ளனர்.

இச்சம்பவம் உருத்திரபுரம் மாணிக்கப்பிள்ளையார்கோவிலில் நடைபெற்றது. (49)

உயர்தர

களும், ஏனைய பாடசாலைகளில் பயின்று உயர்தரவகுப்பிற்காக வேறு பாடசாலைகளுக்குச் செல்ல விரும்பும் மாணவர்களும் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை உரிய பாடசாலைகளுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமிமகாவித்தியாலயம், மகாஜனாக்கல்லூரி, ஹாட்லிக்கல்லூரி. சாவகச்சேரி இந்துக் கல்லூரி யாழ். இந்து மகளிர் கல்லூரி. பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் பாடசாலை மாணவர்களுக்கும் மேற்படி பாடசாலைகளில் உயர்தர வகுப்பைக் கற்கவிரும்பி விண்ணப்பிக்கும் மாணவர்களுக்குமான மேற்படி பரீட்சை எதிர் வரும் 17 ஆம் 18 ஆம் திகதிகளில் அந்தந்த பாடசாலைகளில் நடைபெறும் எனவும் யாழ். மத்தியகல்லூரி, திருக்குடும்பக் கன்னியர் மடம், மானிப்பாய் மகளிர் கல்லூரி யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயம், யூனியன் கல்லூரி மாணவர்களுக்கும் விண்ணப்பித்த மாணவர்களுக்குமான பரீட்சை 20 ஆம் 21 ஆம் திகதிகளிலும் கொக்குவில் இந்துக்கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மாணவர்களுக்கும் விண்ணப்பிப்போருக்குமான பரீட்சை 23 ஆம் 24 ஆம் திகதிகளிலும் அந்தந்தப் பாடசாலைகளில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது,

ஏனைய பாடசாலைகள் தாம் விரும்பியபடி பரீட்சை நடாத்தலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இம் மாணவர்களுக்கு கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி ஆகிய நான்கு பாடங்களில் மட்டுமே பரீட்சைகள் நடாத்தப்படவுள்ளன.

ஆயினும் இம்மாணவர்கள் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தபபடும் சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றி தகுதியான பெறுபேற்றைப் பெற்றால் மட்டுமே தொடர்ந்து உயர்தர வகுப்பில் கற்க அனுமதிக்கப் படுவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

தேசிய

பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சையில் அதிகூடிய திறமைச் சித்திகளைப் பெற்றுவரும் யாழ் மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் இதனாலேயே இம்முறை வெளியார் அனுமதிக்கப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

இடம் பெயர்ந்தோருக்கு

## உணவு விநியோகம் ஆரம்பிக்கப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்து வாழும் 1500 ரூபாவுக்கு குறைந்த வருமானம் உடையவர்களுக்கான உலர் உணவு விநியோகம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இவ் உணவு விநியோகம் 37 ஆம் கட்டத்தையும் அதனைத் தொடர்ந்த இரு கட்டங்களையும் உள்ளடக்கும் என்று செயலக புனர் வாழ்வுப்பிரிவு அறிவித்துள்ளது.

மேலும் தொழில் இழந்தவர்களுக்கான 37, 38 ஆம் கட்ட இலவச உலர் உணவு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது,

மேற்படி உணவு விநியோகங்களை மேற்கொள்வதற்கு வேண்டிய உணவுப் பொருள்களை பெற்றுக் கொள்வதற்கு அனைத்து பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களும் செயலகத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. (க)

தமிழர் பிரச்சினையை

பொருள்களை கொழும்பு ஆயர் மூலமாக வழங்கியிருந்தது வழியில் வீதித்தடை போடப்பட்டிருந்ததால் இடைவழியில் பொருள்களை கோயில்களிலும் பள்ளிக்கூடங்களிலும் இறக்கிவிட்டுத் தாம் திரும்பியதாக எமக்குக் கிடைத்த அறிக்கைகள் தெரிவிக்கின்றன. யுத்தத்தின் மத்தியில் சிக்கியுள்ள மக்கள் தம்மைப் பாதுகாக்கும்படி எப்மை வேண்டியுள்ளனர்.

-இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

யப்பான் உதவி

கடந்த ஆண்டு மே மாதத்தில் யப்பானியப் பிரதமர் கொழும்பு வந்த சமயம் நானும் தலைநகரில் இருந்தேன். சிறிலங்கா அரசினால் மனித உரிமை மீறப்படுவதற்கும் யப்பானிய உதவிக்கும் தொடர்புண்டு என்று யப்பானியப் பிரதமர் உறுதியாகத் தெரிவித்திருந்தார் சிறிலங்கா அரசாங்கம் தான் சட்ட ஆட்சிக்கு மேலானது என்று நினைக்கிறது சட்டத்திற்குப் புறம்போக்காக நடக்கும் சிறிலங்கா அரசுக்கான நிதி உதவியை நிறுத்துவதன் மூலம்தான் உணர வைக்க வேண்டும். உதவி வழங்கும் ஐரோப்பிய நாடுகளும் இம் மாதிரியான நிலைப்பாட்டினைத்தான் கொண்டுள்ளன. எனது உரைக்கு அரசாங்கத்தின் தரப்பில் பதிலுரை வழங்கும் பிரபு இங்கிலாந்து அரசாங்கத்தின்நிலைப்பாட்டினை விளக்குவார் என எதிர்பார்க்கிறேன் என்றார் றிப்பன் பிரபு.

ஆயுதப் போரில் மனித உரிமை மீறப்படுவது ஒரு அம்சமாகும் மனித உரிமைகள் பற்றிச் சிந்திப்பதற்கு முதலில் யுத்த ஒய்வை ஏற்படுத்த வேண்டும். சமாதானமும், நீதியும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை. ஒன்றில்லாமல் மற்றொன்று இல்லை. சகலருக்கும் சமநீதியில்லாமல் சமாதானத்தைக் கொணர முயற்சித்தால் சமாதானம் நிலவாது. சமாதானம் இல்லாத நிலையில் நீதியும் நிலவுவதற்கு வழியில்லை என்றார் அவர்.

மேலும் அவர் சிறிலங்காவில் சமாதானத் தீர்வைக் கொண்டு வருவதற்கு மாட்சிமை தங்கிய மகாராணியின் அரசு முன்வரவேண்டும் என்பது எமது வேண்டுகோள் எனவும் தெரிவித்தார்.

நாவாந்துறை

ளின் மீன்பிடிப் படகுக்காக வழங்கப்படுகிறது

இரண்டாம் பரிசு - குருநகரைச் சார்ந்த மீனவர்களின் மீன்பிடிப் படகுக்காக வழங்கப்படுகிறது

மூன்றாம் பரிசு - அச்சுவேலி மாணவர் அமைப்பினருக்கும்

நான்காம், ஐந்தாம் பரிசுகளை முறையே சண்டிலிப்பாய் வட்டுக்கோட்டை வட்டவைகளுக்கும் வழங்கப்படுகிறது

மாணவர்

கத்தமது மாசிமாத உணவுமுத்திரையைப் பயன்படுத்தலாம்.

இவர்கள் தாம் உணவுப் பொருள்களைப் பெறும் கூட்டுறவுச் சங்கங்களிலேயே மேற்படி கொப்பி, பேனை போன்றவற்றைப் பெற முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

கோட்டக் கல்வி

டாம் தவணைக்காக பாடசாலைகள் திறக்கப்படுகின்றன என்றும் கல்வித்திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இடப்பெயர்ந்த மாணவர்கள் தொடர்பாகவும், இடம் பெயர்ந்தோர் தங்கி இருக்கும் பாடசாலைகள் தொடர்பாகவும் மாற்று ஒழுங்குகளை கவனிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு அறிக்கைசமர்ப்பிக்கும்படி கோட்டக்கல்வி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டும் நேற்றுமாலை வரை அவை தொடர்பான அறிக்கைகள் கிடைக்கவில்லை என்றும் கல்வித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவர்களுக்கு மாற்று இடவசதி ஏற்படுத்திக்கொடுத்தல் மற்றும் மாலைநேர வகுப்புகளை ஒழுங்குபடுத்துதல் போன்ற பல மாற்று ஒழுங்குகள் மேற்கொள்வதற்கு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (க)

ரஞ்சனின்

விஜேரத்தினா படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பற்றிய செய்தி வெளியிட்டமைக்காகவே இப்பரிசு ரூபவாஹினிக்கு கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

விழுதுகள்

தான் இவன் சுகவீனமுற்று இருந்த நாட்களில் இவனை நன்கு பராமரித்தவர்.

கசப்பான விடயம்தான். ஆனால் கேட்டுத்தானே ஆக வேண்டும். ''மச்சான் உன்ர கடைசி ஆசை என்ன?'' கேட்டார்கள் நண்பர்கள், ''அண்ணையையும் கடல் புறாவுக்கு கூப்பிட்டு எடுத்திடுங்கோ' போராட்டம் என்ற வட்டத்தை விட்டு வெளியே சிந்தித்துப் பழக்கமில்லாத ஜெயந்தனின் ஆசைநண்பர்களுக்கு இனம் புரியாத உணர்வை ஏற்படுத்தியது. ஏற்கெனவே இரு சகோதரர்களை இழந்தவன். ''நம்மட அம்மா, அப்பா எப்பிடி இருககாங்களோ, நிச்சயமா எங்கேயாவது அகதிமுகாமிலதான் இருப்பாங்க'' என்றெல்லாம் அடிக்கடி கூறுபவன். அந்த நிலை அடுத்த சந்ததிக்குத் தொடரக்கூடாதென்ற உணர்வில் அண்ணனையும் கூப்பிட்டு எடுக்கச் சொல்கிறான்.

குடும்பப் பொறுப்பு என்ற பெயரால் போராட்டத்திலிருந்து விலகிச்செல்லும் பலரை நினைக்கையில் இவனது கூற்று அவர்கள் நெஞ்சை அழுத்தத்தான் செய்தது.

''என்ன இன்னும் கொண்டெயினரைக் காணயில்ல'' என்று சலித்துக் கொண்டிருந்த இருவரும் கொண்டெயினரக் கண்டதும் தமது பயணத்தை ஆரம்பித்தனர். ''போட்டு வாறம்'' நிச்சயமாக அப்படியான நிகழ்வு ஒன்று நடக்கப் போவதில்லை என்று தெரிந்தும் அந்த பொய்யை பழக்க தோசத்தாலும் நண்பர்களை திருப்திப்படுத்த வேண்டும் என்பதற்காகவும்... போட்டு வாறம்... போட்டுவாறம்... ''உடலால் மட்டுமே போகிறோம். உணர்வால் உங்களிடமே திரும்பிவருவோம்'' என்பதன் அர்த்தமோ அது.

வேகமாகத் தம்மை நோக்கி வரும் அப்படகைக் கண்டதும் மரணபயம் தொற்றிக் கொண்டது சிறிலங்கா கடற்படையினருக்கு. ஜெயந்தனதும் சிதம்பரத்தினதும் வாய் 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்று உச்சரித்துக் கொண்டன

5-5 91 அன்று செய்தித்தாள்கள் ஜெயந்தன், சிதம்பரம் ஆகிய போராளிகளின் பெயர்களை கரும்புலிகளாக உலகிற்கு இனம் காட்டின ஸ்ரீலங்கா அரசுக்கு இத் தாக்குதலை ஜீரணிப்பது மிகக்கஷ்டமாக இருந்தது.மிகத்தாமதமாக விழுங்கி, விழுங்கி முழுமையாக ஒப்புக் கொள்ளாமல் ஏதோ வழியாக செய்தி வெளியிட்டது. இது வரை மில்லர், காந்தரூபன், வினோத், கொலின்ஸ், போர்க், டாம்போ என்றிருந்த கரும்புலிகளின் பட்டியலில் மேலும் இருவரின் பெயரை இணைத்துக் கொள்கிறது தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாறு.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.